**செய்தி வெளியீடு எண்.859** **நாள்.19.11.2009**

## குஜராத் மாநில அரசின் செய்தித் துறையின் ஆணையர் திரு.வெ.திருப்புகழ், இ.ஆ.ப. அவர்கள் தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் செயல்பாடுகள் குறித்து நேரிடையாக பார்வையிட்டு பணிகள் குறித்து கேட்டறிந்தார்கள்.

இன்று **(19.11.2009)** சென்னை தலைமைச் செயலகத்தில், குஜராத் மாநில அரசின் செய்தித் துறையின் ஆணையர் திரு.வெ.திருப்புகழ், இ.ஆ.ப. அவர்கள் தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் ஒவ்வொரு பிரிவும் இயங்குவது குறித்து நேரிடையாக அப்பிரிவுகளுக்கு சென்று பணிகள் குறித்து கேட்டறிந்தார்கள். தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு.சி.காமராஜ், இ.ஆ.ப. உடனிருந்து பிரிவின் பணிகள், செயல்பாடுகள் குறித்து விளக்கினார்கள்.

முதலில், பத்திரிகையாளர் அறைக்கு சென்று, அப்பொழுது அங்கிருந்த பத்திரிகையாளர்களிடம் கலந்துரையாடினார்கள். செய்தி வெளியீட்டுப் பிரிவின் மூலம் அவர்களுக்கு சிறப்பான முறையில் செய்தி வெளியீடுகள்/செய்தி குறிப்புகள்/புகைப்படங்கள் மின்னஞ்சல் மூலம் குறித்த நேரத்திற்குள் பெறப்படுவதை அங்கிருந்த பத்திரிகையாளர்கள் விளக்கினார்கள். அதன் மூலம் கடைசி நேரத்தில் பெறப்படும் செய்திகளைக் கூட அவர்களுக்கேற்றவாறு தலைப்பிட்டு, தொகுத்து உடனடியாக அச்சுக்கு அனுப்புவதற்கு ஏதுவாக உள்ளது என்று தெரிவித்தார்கள்.

அடுத்து, செய்தி வெளியீட்டுப் பிரிவின் பணிகள் குறித்தும் , சுழற்சி முறையில் பணிபுரிவதும், இரவு நேரத்தில் உதவி மக்கள் தொடர்பு அலுவலர் பணிபுரிவதன் அவசியத்தையும் கேட்டறிந்தார்கள். செய்தி வெளியீடுகள்/செய்தி குறிப்புகள்/ நிகழ்ச்சிகளை பதிவு செய்ய கோரும் கடிதங்கள்/செய்தியாளர் சந்திப்பு கடிதங்கள், ஊடகங்களுக்கு மின்னஞ்சல்/தொலைநகல் மூலம் அனுப்பப்படுவதை நேரடியாக பார்வையிட்டார்கள்.

செய்தி வெளியீட்டுப் பிரிவின் இதர பணிகளான, பத்திரிகையாளர் நலத் திட்டங்களான பத்திரிகையாளர் ஓய்வூதியம்/பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம்/பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி/ மருத்துவ உதவி நிதி/பத்திரிகையாளர் நல நிதியம், பத்திரிகையாளர்களுக்கு இலவச பேருந்து பயண அட்டை வழங்குவது/இரயிலில் செல்வதற்கு 50% சலுகை பெறுவதற்கு சான்றிதழ் வழங்குவது/ பத்திரிகையாளர் அங்கீகார அட்டை, செய்தியாளர் அட்டை வழங்குவது/ செய்தியாளர் சந்திப்புக்கு ஏற்பாடு செய்வது குறித்து செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் திரு.சி.காமராஜ்,இ.ஆ.ப. அவர்கள் விளக்கினார்கள். செய்தி வெளியீட்டுப் பிரிவு உதவி இயக்குநர், மக்கள் தொடர்பு அலுவலர், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்களிடம் கலந்துரையாடியானார்கள்.

புகைப்படப் பிரிவிற்கு சென்று ஊடகங்களுக்கு புகைப்படங்கள் அனுப்பும் பணிகளை பார்வையிட்டு, ஒரு நாளைக்கு எத்தனை புகைப்படங்கள் எத்தனை ஊடகங்களுக்கு அனுப்பப்படுகின்றன என்பதை தெரிந்து கொண்டார்கள். புகைப்படப் பிரிவின் புகைப்படக்காரர்களால் புகைப்படங்கள் அனுப்பப்படுவது குறித்து செயல்முறை விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

..2

மேற்கோள் பிரிவிற்கு சென்று, நாளிதழ்கள், காலமுறை இதழ்களில் வரும் அரசுக்கு தொடர்புடைய செய்திகள் மாண்புமிகு முதலமைச்சர்/மாண்புமிகு துணை முதலமைச்சர்/மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்/தலைமைச் செயலாளர்/அனைத்து செயலாளர்களுக்கும் செய்தி நறுக்குகள் எவ்வாறு அனுப்பப்படுகின்றன என்பதை பணியிலிருந்த மக்கள் தொடர்பு அலுவலர் விளக்கினார்கள். காலையில், 7.30மணிக்கும், மாலையில் 5.00 மணிக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு செய்தி நறுக்குகள் அனுப்பப்படுவதற்கு யார், யார் பணிபுரிகிறார்கள் என்ற விவரத்தை கேட்டறிந்தார்கள். இன்று அனைத்து செயலாளர்களுக்கு அனுப்பப்பட இருந்த செய்தி நறுக்குகளையும் பார்வையிட்டார்கள். மேலும், அனைத்துச் செய்தித்தாள்கள் மாதந்தோறும் பைண்ட் செய்யப்பட்டு பாதுகாப்பாக அடுக்கி வைக்கப்பட்டிருப்பதையும், தேவைப்படும் ஆண்டின் செய்தி நறுக்குகள் எப்படி உடனடியாக எடுத்து தரப்படுகின்றன என்பதையும் தெரிந்து கொண்டார்கள்.

இப்பிரிவுகளை பார்வையிட்ட பிறகு தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்பு துறையின் மேற்கண்ட பிரிவுகள் சிறப்பாக செயல்பட்டு வருவது குறித்தும், அரசின் துறைகளுக்கும், ஊடகங்களுக்கும் பாலமாக இத்துறை இருப்பது குறித்தும், பொதுமக்களுக்கு உடனுக்குடன் அரசின் திட்டங்களை/செயல்பாடுகளை/ செய்திகளை தெரிவிக்கும் பணிகளை மேற்கொண்டு வருவது பாராட்டுக்குரியதாகும் என்று தெரிவித்து, இப்பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் சில பணிகளை அவர்கள் மாநிலத்தில் உடனடியாக நடைமுறைப்படுத்துவது பற்றியும் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு.சி.காமராஜ், இ.ஆ.ப. அவர்களிடம் தெரிவித்தார்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.